பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**25 05 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** பழங்குடியின சமுதாயத்தின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**2.** நாட்டின் கலாச்சாரத்தை பாதுகாக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும் என்று மத்திய சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு வலியுறுத்தியுள்ளார்.

**3.** கர்நாடகா மாநிலத்தில் **Tatte Hakkalu** நதியில் மூழ்கி ஒரே குடுப்பத்தைச் சேர்ந்த ஏழு பெண்கள் உட்பட எட்டு பேர் உயிரிழந்தனர்.

**4.** இஸ்லாமியர்களின் புனித பயணமான ஹஜ் யாத்திரை இன்று தொடங்குகிறது.

**5.** ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில், ராஜஸ்தான் அணி **30** ரன் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

அனைத்து பழங்குடியின சமுதாயத்தின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், பொது சிவில் சட்டத்திலுருந்து விலக்கு அளிப்பதற்கான சிறப்பு சட்டப் பிரிவு கொண்டுவரப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், பொது சிவில் சட்டம் பழங்குடியின மக்களின் உரிமைகளுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று கூறினார்.

சுதந்திரப் போராட்ட வீரரும், பழங்குடியின மக்களின் அடையாளமாக திகழும் பகவான் பிர்சா முண்டாவை நினைவுகூர்ந்த அவர், பழங்குடியின மக்கள் வசிக்கும் வனம் மற்றும் நிலப் பகுதிகளில் எவரும் ஆக்கிரமிப்பு செய்ய முடியாது என்று உறுதிபடத் தெரிவித்தார்.

பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பட்ஜெட்டில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை திரு. அமித் ஷா சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

நாட்டின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை உரிய மாண்புடன் பாதுகாக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும் என்று மத்திய சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு வலியுறுத்தியுள்ளார்.

ஆந்திர மாநிலம் திருப்பதியில் செய்தியாளரிடம் பேசிய அவர், நாட்டின் கலாச்சாரத்தை பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக தெரிவித்தார்.

திருப்பதி திருமலைக்கு செல்லும் நடைபாதையில் பக்தர்களின் வசதிக்காக பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதற்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

இதனிடையே கோடை வெப்பம் அதிகரித்துள்ளதால் மக்கள் தேவையான முன்னச்சரிக்கை நடவடிக்கையுடன் இருக்குமாறு அமைச்சர் திரு. ராம் மோகன் நாயுடு கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

பாதுகாப்பு, தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா - அமெரிக்கா இடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு மார்கோ

ரூபியோவுடன் பேச்சு நடத்தியதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் விவாதித்ததாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சிபிஎஸ்இ பொதுத் தேர்வு மறுமதிப்பீட்டு நடைமுறைகளில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எதிர்கொண்டு வரும் தொழில்நுட்பம் சார்ந்த சிக்கல்களுக்கு உடனடி தீர்வு காண்பது தொடர்பாக மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனிடம் ஆலோசனை நடத்தினார்.

இதுதொடர்பாக கல்வியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பாரத ஸ்டேட் வங்கி, பேங்க் ஆஃப் பரோடா, இந்தியன் வங்கி, கனரா வங்கி ஆகிய 4 பொதுத்துறை வங்கிகளின் பணப் பரிவர்த்தனைக்கான கட்டமைப்புக்களை வலுப்படுத்து குறித்தும், தேர்வுக்குப் பிந்தைய சேவைகளை சிபிஎஸ்இ தளத்துடன் ஒருங்கிணைப்பதற்கான தொழில்நட்பம் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கர்நாடகாவில் விரைவில் நடைபெற உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் பிஜேபியின் செயல்பாடுகள் குறித்து விவாதிப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் அக்கட்சியின் தேசிய தலைவர் திரு. நிதின் நபின் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி தேசியத் தலைவர் திரு. நிதின் நபின், காங்கிரஸ் அரசு மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதாக கூறினார்.

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அக்கட்சி தவறிவிட்டதாக திரு. நிதின் நபின் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

மேற்காசியாவில் பதற்றமான சூழல் உள்ள நிலையில் இஸ்லாமியர்களின் ஹஜ் புனித யாத்திரை இன்று தொடங்குகிறது.

ஆண்டுதோறும் ஐந்து நாட்கள் மேற்கொள்ளப்படும் இந்தப் புனித யாத்திரையில் இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் இருந்து **16** லட்சம் இஸ்லாமியர்கள் பங்கேற்கின்றனர்.

சவுதி அரேபியாவில் உள்ள மெக்கா, மதீனா போன்ற புனித தலங்களுக்குச் செல்வதை இஸ்லாமியர்கள் கடமையாக கருதுகின்றனர்.

இந்த ஆண்டு இந்தியாவில் இருந்து ஒரு லட்சத்து **75** ஆயிரம் யாத்ரீகர்கள் இந்தப் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

<<<<>>>>

கர்நாடகா மாநிலம் உத்தர கர்நாடக மாவட்டத்தில் **Tatte Hakkalu** நதியில் மூழ்கி ஒரே குடுப்பத்தைச் சேர்ந்த ஏழு பெண்கள் உட்பட எட்டு பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

அப்பகுதியில் நேற்றிரவு பெய்த கனமழையை அடுத்து ஆற்றில் நீர்வரத்து அதிகரித்திருந்த நிலையில், கிளிஞ்சல் சேகரிப்பதற்காக ஆற்றில் இறங்கியபோது இந்த துரய சம்பவம் ஏற்பட்டதாக காவல்துறயினர் தெரிவிக்கின்றனர்.

மூன்று பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாகவும், காணாமல்போன 3 பேரை தேடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா 5 லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என அம்மாநில முதலமைச்சர் திரு. சித்தராமையா தெரிவித்துள்ளார்.

இதனிடையே இந்த துரய சம்பவத்திற்கு குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் ஆகியோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் பிரதமரின் நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

<<<<>>>>

மத்திய மற்றும் வடமேற்கு இந்தியாவில் கடும் வெப்பம் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக இப்பகுதிகளில் அதிகரித்து வரும் வெப்பநிலை காரணமாக மக்கள் தேவையின்றி வெளியில் வருவதை தவிர்க்குமாறு சுகாதாரத்துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

உடலில் நீர்ச்சத்தை தொடர்ந்து பராமரிக்கமாறும், குழந்தைகள் மற்றும் மூத்த குடிமக்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை மேற்கொள்ள சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்றும் சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே மத்திய மற்றும் வடமேற்கு இந்தியாவில் அடுத்த 7 தினங்களுக்கு கடும் வெப்ப அலை வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஆந்திரப்பிரதேசம், இமயமலையை ஒட்டிய பகுதிகள், சிக்கிம், அசாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், கேரளம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இன்று கன முதல் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மேற்காசியாவில் உள்ள தேக்க நிலைக்கு முழுமையான தீர்வு காணப்பட வேண்டும் என்று ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி உர்சுலா வோண்டேர் லேன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், அமெரிக்கா ஈரான் நாடுகளிடையேயான பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்கு வரவேற்பு தெரிவித்துள்ளார்.

ஈரானின் யுரேனியம் செறிவூட்டல் நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் அனுமதி அளிக்கக் கூடாது என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் வர்த்தக போக்குவரத்து தடையின்றி நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் நடைபெறும் அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு ஐரோப்பிய யூனியன் முழு ஆதரவு அளிக்கும் என்று திருமதி உர்சுலா வோண்டேர் லேன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில், ராஜஸ்தான் அணி 30 ரன் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

மும்பையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், முதலில் ஆடிய ராஜஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 205 ரன் எடுத்தது.

206 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய மும்பை அணி 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 175 ரன் எடுத்தது.

மற்றொரு ஆட்டத்தில், தில்லி அணி 40 ரன் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.

கொல்கத்தாவில் நேற்றிரவு நடைபெற்ற போட்டியில், முதலில் ஆடிய தில்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 203 ரன் எடுத்தது.

204 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய கொல்கத்தா அணி 18 புள்ளி 4 ஓவரில் 163 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

---------------

நார்வே செஸ் போட்டி Oslo-வில் இன்று தொடங்குகிறது.

இந்தப் போட்டியில் இந்தியாவின் குகேஷ், பிரக்ஞானந்தா, மேக்னஸ் கார்ல்சன் உட்பட முன்னணி கிராண்ட் மாஸ்டர்ஸ் பங்கேற்கின்றனர்.

**<<<<The End>>>>**